<u>**பட்டுக்கோட்டை நகராட்சி**</u>

**ஸ்ரீ விகாரி வருடம் ஆடி மாதம் 15–ம் தேதி திருவள்ளுவராண்டு 2047 (2019–ம் ஆண்டு ஜுலை 31ம் தேதி) புதன் கிழமை காலை 12.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை.. திரு. என்.பாஸ்கர்.,**
**தனி அலுவலர்/ ஆணையர் (கூ.பொ).**

<u>**பொருள் எண்..1**</u>

இந்நகராட்சிக்கு சொந்தமான வரியில்லா இனங்களுக்கு 2018–19 மற்றும் 2019–20ம் ஆண்டிற்கு குத்தகை இனங்களிலிருந்து பிடித்தம் செய்யப்பட்ட GST Return–க்கு டிசம்பர்– 2018 முதல் ஜுன்– 2019 வரை ( FORM 3B & FORM GSTR-1) முடிய உள்ள மாதங்களுக்கான சேவை வரித் தொகை செலுத்தியதற்கான செலான்களை சேவை வரி அலுவலகத்தில் தாக்கல் (Filing) செய்ததற்கான ஆடிட்டர் கட்டணம் ரூ.17,500/– ஐ திரு.ஆர்.ரவிச்சந்திரன், ஆடிட்டர், தஞ்சாவூர் அவர்களுக்கு வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.. 6478/2014/அ2) |

**தீர்மான எண்.. 133 ... . அனுமதிக்கப்பட்டது ......**

<u>**பொருள் எண்..2**</u>

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கோட்டம்–IIல் பணிபுரிந்து வரும் திருமதி.தி.ராணி க/பெ. ஐசக் டைமண்ட் பொன்னையா என்பவர் 10.02.2014 முதல் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வருகிறார். திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு பணி மாறுதலில் செல்வதற்கு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பமானது மன்றத்தின் பார்வைக்கும், அன்னார் பணி மாறுதலில் செல்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.. மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்..396/19/எச்1)

**தீர்மான எண்.. 134 ... . அனுமதிக்கப்பட்டது ......**

**<u>பொருள் எண்..3</u>**

இந்நகராட்சி பொதுப்பிரிவில் கணினி தட்டச்சு பணி செய்ய கணினி தட்டச்சு தெரிந்த ஒருவரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அந்தந்த நிதியாண்டுகளில் நிர்ணயம் செய்யப்படும் தினக்கூலி விகிதத்தின் அடிப்படையில் Out sourcing மூலம் **1.6.2019** முதல் **31.3.2020** வரை பணியமர்த்திக் கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றம் தனது தீர்மானம் எண்.. **43**, நாள்.. **31.5.2019**ல் அனுமதி வழங்கியுள்ளது. அதன்பேரில் கணினி தட்டச்சு தெரிந்த ஒருவரை சப்ளை செய்திட **10.6.2019**ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு விலைப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது.

| **நிறுவனத்தின் பெயர்** | **நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.** |
|---|---|
| 1) Thiru.K.Edison, Contractor, Pattukkottai. | 358/- |
| 2) Thiru.S.Ganesan & Municipal Contractor, Pattukkottai | 375/- |

மேற்கண்ட இரண்டு விலைப்புள்ளிகளில் Thiru.K.Edison, Contractor, Pattukkottai அவர்கள் கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளதாலும், மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ள **2018–19**ம் ஆண்டு விலைப்பட்டியலில் கண்டுள்ள தொகையை (நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.**359/–**) விட குறைவாக உள்ளதாலும், .K.Edison, Contractor, Pattukkottai நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.. குறைந்த விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். மேலும் அலுவலகப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஊதியம் வழங்க நடவடிக்கை மேற்கொள்வதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்..2170/2019/சி2)

**தீர்மான எண்.. 135 ... அலுவலக குறிப்புஅனுமதிக்கப்பட்டது ......**

**<u>பொருள் எண்..4</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி தேர்வுநிலை நகராட்சியாகும். இந்நகராட்சி 21.83 சதுர.கி.மீ. பரப்பளவு கொண்டது. இதில் 33 வார்டுகள் உள்ளன. 33 வார்டுகளில் துப்புரவு பணி சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின் படி மக்கள் தொகை 73,097 ஆகும். தற்சமயம் நடப்பு ஆண்டு மக்கள் தொகை 78740 ஆகும். இதில் 21174 குடியிருப்புகள் உள்ளன. இந்நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்கள் 120 ஆகும். இதில் தற்சமயம் 103 நபர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அரசாணை நிலை எண்.101 நகராட்சி நிர்வாகம் குடிநீர் வழங்கல் துறை (கு.ப.3) நாள்.30.04.1997 ல் தெரிவிக்கப்பட்டுள்ள அளவுகோலின்படி 279 பணியாளர்கள் பணியமர்த்தப்பட வேண்டும். அதன்படி கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>அரசாணை 101 ன் படி தேவைப்படும் மொத்த பணியாளர்களின் கணக்கீடு விவரம்</u>**

| வ.எண் | வேலை வகைப்பாடு | விபரம் | துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | 250 குடியிருப்புகளுக்கு 3 நபர் வீதம் மொத்தம் 21, 174 குடியிருப்புகளுக்கு | 21,174 / 250*3 | 254 நபர்கள் |
| 2. | சிறிய லாரி 3 நபர் வீதம் | 2*3 Nos | 6 நபர்கள் |
| 3. | டம்பர் பிளேசர் 2 நபர் வீதம் | 1*2 Nos | 2 நபர்கள் |
| 4. | காம்பேக்டர் லாரி 2 நபர் வீதம் | 2*2 Nos | 4 நபர்கள் |
| 5. | JCB க்கு 1 நபர் வீதம் | 1*1 Nos | 1 நபர்கள் |
| 6. | கழிவுநீர் ஊர்தி 2 நபர் வீதம் | 1*2 Nos | 2 நபர்கள் |
| 7. | பேருந்து நிலைய கழிவறை சுத்தம் செய்ய | | 2 நபர்கள் |
| 8. | பேருந்து நிலையத்தினை சுத்தம் செய்ய கிரேடு 4 நபர் வீதம் | | 4 நபர்கள் |
| 9. | உரக்கிடங்கு பராமரிப்பு 20 டன்க்கு மேல் 4 நபர்கள் வீதம் (மொத்தம் 41 டன்கள்) | | 4 நபர்கள் |
| தேவைப்படும் மொத்த பணியாளர்கள் | | | 279 நபர்கள் |

**<u>அரசாணை 101 ன் படி தேவைப்படும் பற்றாக்குறை கூடுதல் பணியாளர்களின் கணக்கீடு விவரம்</u>**

| வ.எண் | விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | அரசாணை (நிலை) எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.04.1997 ன் படி தேவைப்படும் மொத்த துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | 279 நபர்கள் |
| 2. | அனுமதிக்கப்பட்ட நிரந்தர துப்புரவு பணியாளர்களின் பணியிடங்களின் எண்ணிக்கை | 120 நபர்கள் |
| 3. | தற்போது பணியில் உள்ள நிரந்தர துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | 103 நபர்கள் |
| 4. | கூடுதலாக தேவைப்படும் துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | 176 நபர்கள் |

நகராட்சியில் பணியிலுள்ள 103 துப்புரவு பணியாளர்களை தவிர மீதமுள்ள 176 நபர்கள் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் தனியார் மூலம் பணி நியமனம் செய்யப்பட வேண்டும். தற்பொழுது நகராட்சி நிதிநிலைமையினை கருத்தில் கொண்டு மேற்படி 176 பணியிடத்தில் 150 பணியாளர்களை மட்டும் Out Sourcing முறையில் பணியமர்த்தி கொள்ள அனுமதி வேண்டியும் அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு கீழ்க்கண்டவாறு ஊதியம் வழஙகப்பட வேண்டும்.

| வ.எண் | ஊதிய விபரம் | மொத்தம் |
|---|---|---|
| 1. | துப்புரவு பணியாளர்கள் 150*283*30 | 12,73,500/– |
| | மாதம் ஒன்றுக்கு | 12,73,500/- |

எனவே ஆண்டு ஒன்றுக்கு (12,73,500x12 = 15282000) தஞ்சாவூர் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்தி வழஙகும் உத்தேச செலவினம் ரூ. 15282000/- ஆகும். தனியார் மூலம் துப்புரவு பணியாளர்களை பணி நியமனம் செய்வதற்கு நிர்வாக அனுமதி பெறுவதற்கு தஞ்சாவூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்கள் வழியாக சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் மூன்று ஆண்டுகளுக்கு நிர்வாக அனுமதி பெறுவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.5252/18/எச்1

**தீர்மான எண்.. 136 ... . அனுமதிக்கப்பட்டது ......**

**<u>பொருள் எண்..5</u>**

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்..16845/2019/டிபி3, நாள்..16.07.2019–ன்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மக்கள் தொகை கணக்கெடுப்பு–2021 பணிக்களுக்காக 33–வார்டுகளுக்கான நகர வரைபடம் **AUTOCAD/DWG/DXF/JPEG-**ல் ஏதேனும் ஒன்றில் தயார் செய்து **Soft copy and Hard copy** அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மக்கள் தொகை கணக்கெடுப்பு–2021 பணிக்களுக்காக 33 வார்டுகளுக்கான வார்டு மறுவரையறை செய்யப்பட்டட நகர வரைபடம் **(Town MaP) AUTOCAD**–ல் தயார் செய்து அனுப்பி வைப்பதற்கும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக்குறிப்பு.. | மன்றம் அனுமதி வழங்கலாம்<br><br>(ந.க.எண்..3160/2019/எப்1) |

**தீர்மான எண்.. 137 ... . அனுமதிக்கப்பட்டது ......**

**பொருள் எண்..6**

பட்டுக்கோட்டை நகராட்சி ஆணையர் அவர்களை 2வது பிரதிவாதியாக இணைத்து தஞ்சாவூர் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண்.. **A.S.No.35/2019-**ல் நகராட்சி ஆணையர் சார்பாக திரு.டி.தேவக்குமார், பி.எஸ்.சி.பி.எல்., ஆஜராகி வழக்கினை நடத்துவதற்கும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.20,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக்குறிப்பு.. | மன்றம் அனுமதி வழஙகலாம். |
| | (ந.க.எண்..2904/2019/எப்.1) |

**தீர்மான எண்.. 138 ... . அனுமதிக்கப்பட்டது ......**

**பொருள் எண்..7**

இந்நகராட்சியின் எல்லைக்குட்பட்ட 33 வார்டு பகுதிகளிலும் உள்ள அரசு கட்டிடம், தனியார் கட்டிடம், வணிக கட்டிடம் மற்றும் குடியிருப்பு கட்டிடஙகளில் உள்ள மழை நீர் சேகரிப்பு அமைப்பு கட்டமைப்பு ஆய்வு செய்யவும், மழைநீர் கட்டமைப்பு ஏற்படுத்தாத கட்டிடஙகளில் மழைநீர் கட்டமைப்பு ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. மேற்படி, திட்டத்தினை செயல்படுத்திட ஏதுவாக களப்பணியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர் நியமனம் செய்து பணிகள் நடைபெற்று வருகின்றது.

மேற்படி திட்டத்தினை பொது மக்கள் அறியும் வண்ணம், நகரின் முக்கிய பகுதிகளில் 1.)விளம்பர பலகைகள் அமைக்கவும், 2.) ஆட்டோ மூலம் விளம்பரம் செய்யவும், 3.)வீடு வீடாக சென்று மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஸ்டிக்கர் ஒட்டவும், 4.) துண்டு பிரசுரம் விநியோகம் செய்யவும் மற்றும் 5.)விழிப்புணர்வு பேரணிகள் நடத்திடவும் போன்ற பணிகள் மேற்கொள்ளவும் வேண்டியது அவசியமாகிறது. எனவே, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு தொடர்பாக பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.1,50,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | 1.) மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 2.) மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு பணியானது 1.07.2019 முதல் 15.07.2019 வரை நடைபெற உள்ள குறுகிய கால பணியாகும். எனவே, பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்னனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொள்வதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்..3783/2011/எப்1) |

**தீர்மான எண்.. 139 ... . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ......**

**<u>பொருள் எண்..8</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு TN49AZ-5707 டிப்பர் வாகனத்திற்கு முன்பக்கம் இரண்டு டயர்கள் மற்றும் பின்பக்கம் நான்கு டயர்கள் புதிதாக சப்ளை செய்வதற்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் 10.07.2019 அன்று கீழ்க்கண்ட நிறுவனத்தாரிடமிருந்து மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | 1 செட் டயர் விலை ரூ. |
|---|---|---|
| 1. | அன்னை சத்யா இஞ்சினியரிங் ஒர்க்ஸ், 13, ராம்கே ரோடு, செங்கம் தியேட்டர் அருகில், திருவாரூர். | 1,24,000— |
| 2. | குரு ஆட்டோ கரேஜ் ராஜு நகர் எண்..1, நாகை ரோடு, தஞ்சாவூர். | 1,25,000— |
| 3. | சிவசக்தி ஆட்டோ ஒர்க்ஸ், தனலெட்சுமி நகர், அஞ்சுதலை வாய்க்கால், கும்பகோணம். | 1,26,500— |

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை வரிசை எண்..1ல் காணும் நிறுவனம் அளித்துள்ளது. இவ்வொப்பந்தப்புள்ளியானது வரிசை எண்..2 மற்றும் 3ல் காணும் நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியினைவிட குறைவாக உள்ளது. ஆகவே குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை அளித்துள்ள அன்னை சத்யா இஞ்சினியரிங் ஒர்க்ஸ், ,திருவாரூர் நிறுவன ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

| அலுவலக குறிப்பு | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
|---|---|
| | 2) பொது சுகாதார பணியின் அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம். |
| | 3) அதற்குண்டான உத்தேச செலவு ரூ.1,24,000/—யை பொது நிதி மூலம் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்..2873/19/எச்1) |

**தீர்மான எண்.. 140 ... . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ......**

**<u>பொருள் எண்..9</u>**

பட்டுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.28, அண்ணாகுடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள நவீன எரிவாயு தகன மேடை வளாக பகுதியில் உள்ள சுமார் 100 அடி உயரமுள்ள புகைபோக்கி, 16.1.2018 அன்று வீசிய புயல்காற்றினால் (கஜாபுயல்) மிகவும் சேதமடைந்து இப்புகைபோக்கி தரைமட்டத்தில் இருந்து சுமார் 30 அடிக்கு மேல் உள்ள பகுதி உடைந்து முறிந்துவிழும் நிலையில் உள்ளது. எனவே, இத்தகன மேடையினை உபயோகிக்கும்பொழுது இப்புகைபோக்கி வழியாக செல்லும் புகை தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தால் தெரிவித்துள்ளபடி நச்சுத்தன்மையினை குறைத்து முறையாக புகையினை வெளியேற்ற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், இப்புகைபோக்கி மிக உயரமாக உள்ளமையால் தற்போது உடைந்துள்ள இப்பகுதி எந்நேரமும் உடைந்து விபத்து ஏற்படுத்தும் என்பதனால் பொதுமக்களின் நலன் கருதி இவ்உயரமான புகைபோக்கியினை மிக அதிக திறன் கொண்ட கிரேன் மூலம் அப்புறப்படுத்தி புதியதாக புகைபோக்கி பொருத்திடவும், அவ்வளாகத்தில் உள்ள ஈமச்சடங்கு செய்யும் மையம் மற்றும் மேற்கூறை முற்றிலும் இடிந்து சேதமடைந்த காரணத்தினால் இத்தகன மேடையில் உள்ள புகைபோக்கியினை புனரமைப்பு செய்திடவும் மற்றும் இதர பணிகள் செய்திட ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.1275000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1) பொதுநிதியின் கீழ் மன்றம் அனுமதிக்கலாம்.

2) பணியினை விரைவில் முடிக்கும் பொருட்டு தனி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.2610/2019/இ.1)

**தீர்மான எண்.. 141 … . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ……**

**<u>பொருள் எண்..10</u>**

பட்டுக்கோட்டை நகராட்சியில் கீழ்கண்ட இடங்களில் கஜாபுயலால் சேதமடைந்த மரங்களை 3.7.2019 அன்று அந்ததந்த இடங்களில் ஏலம் மேற்கொள்ளப்பட்டது. அதில் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி கேட்டக்கப்பட்டதன் விபரம் கீழ்கண்டவாறு.

| வ.எண் | இடம் | அதிகபட்ச ஏலத்தொகை | ஏலம் கேட்டவர் பெயர் மற்றும் முகவரி |
|---|---|---|---|
| 1) | சூந்தங்காடு நீரேற்று நிலைய வளாகம் (புளியமரம், வேப்ப மரம், மாமரம், புங்கன் மரம், நாவமரம், சவுக்கு மரம்) | 35000.00 | திரு சி.சண்முகம், 57, கடலூர் ஒ.டி. மனக்குப்பம், கடலூர். |
| 2) | பெரிய கடைதெரு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகம் (நெட்டிலிங் மரம்) | 9750.00 | திரு சி.சண்முகம், 57, கடலூர் ஒ,டி. மனக்குப்பம், கடலூர். |
| 3) | அந்தோணியார்கோவில் தெரு பள்ளி வளாகம் (புளிய மரம்) | 6500.00 | திரு சி.சண்முகம், 57, கடலூர் ஒ,டி. மனக்குப்பம், கடலூர். |

| | | | |
|---|---|---|---|
| 4) | காந்திபூங்கா வளாகம் (கொன்னமரம், நெட்டிலிங், தூங்கு மூஞ்சி மர விறகுகள்) | 5000.00 | திரு சி.சண்முகம், 57, கடலூர் ஒ,டி. மனக்குப்பம், கடலூர். |
| 5) | பழைய வீட்டு வசதி வாரிய வளாகம் (கொன்ன மரம், வேப்ப மரம்) | 17900.00 | திரு ஆர்.சரவணன், படுவான்கொல்லை, பள்ளத்தூர் (அஞ்சல்) பட்டுக்கோட்டை (தாலுக்கா) |
| 6) | பெருமாள்கோவில் பள்ளி வளாகம் (கொன்ன மரம்) | 5500.00 | திரு சி.சண்முகம், 57, கடலூர் ஒ,டி. மனக்குப்பம், கடலூர். |
| 7) | கரிக்காடு பகுதி (நெட்டிலிங் விறகு ) | 4000.00 | திரு சி.சண்முகம், 57, கடலூர் ஒ,டி. மனக்குப்பம், கடலூர். |
| 8) | காசங்குளம் பகுதி ( சவுக்கு, வேம்பு மற்றும் கலப்பட மர விறகுகள்) | 2200.00 | திரு சி.சண்முகம், 57, கடலூர் ஒ,டி. மனக்குப்பம், கடலூர். |

மேற்கண்ட அதிகபட்ச ஏலத்தொகையை ஒப்புக்கொள்ள மன்ற பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4107/2018/இ.1)

**தீர்மான எண்.. 142 ... . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ......**

<u>பொருள் எண்..11</u>

பட்டுக்கோட்டை நகராட்சி குடிநீர் விநியோகத்தில் பயன்படுத்தப்பட்டுவரும் வாகனம் TN-49 AT-7782 க்கு 2019–2020 ஆம் ஆண்டுக்கான மத்திய,மாநில அரசுகளுக்கு செலுத்த வேண்டிய சாலை வரி மற்றும் இதர வரியினங்களை அவசர அவசியம் கருதி குடிநீர் லாரி ஒட்டுநர் திரு எஸ்.சரீப் மூலம் ரூ.7021/–ஐ வட்டார போக்குவரத்து அலுவலர், வட்டார போக்குவரத்து அலுவலகம், பட்டுக்கோட்டையில் செலுத்தப்பட்டது. ஆகவே, மேற்படி தொகை ரூ.7021/–ஐ இந்நகராட்சி குடிநீர் லாரி ஒட்டுநர் திரு எஸ்.சரீப் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1) குடிநீர் நிதியின் கீழ் மன்றம் அனுமதிக்கலாம்.

2) அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2727/2019/இ.1)

**தீர்மான எண்.. 143 ... . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ......**

**<u>பொருள் எண்..12</u>**

பட்டுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32 பெருமாள்கோவில் நகராட்சி நடுநிலைப்பள்ளியின் சுற்றுச்சுவர் கடந்த **16.11.2018** அன்று வீசப்பட்ட கடும் புயல் (கஜாபுயல்–2018) காற்றினால் இடிந்து விட்டது. பள்ளியின் சுற்றுச்சுவர் இடிந்து கிடப்பதால் பள்ளி வளாகத்திற்குள் ஆடு, மாடுகள் புகுந்துவிடுகிறது. இதனால் மாணவ, மாணவிகள் மிகுந்த அச்சத்தில் உள்ளனர். ஏனவே, பள்ளி மாணவர்களின் பாதுகாப்பு நலன்கருதி இடிந்துள்ள சுற்றுச்சுவரினை அப்புறப்படுத்தி மீண்டும் புதிய சுற்றுச்சுவர் அமைத்திட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.320000/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** கல்வி நிதியின் கீழ் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2835/2019/இ.1)

**தீர்மான எண்.. 144 … . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது .....**

**<u>பொருள் எண்..13</u>**

பட்டுக்கோட்டை நகராட்சி வார்டு எண்.15 போஸ்ட் ஆபிஸ் ரோட்டில் உள்ள நகராட்சி பொதுகழிவறை கட்டிடத்தினை, தலைமை ஆசிரியர், அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, பட்டுக்கோட்டை அவர்களின் மனுவில் எம்பள்ளியில் 2000 மாணவிகள் பயின்று வருகிறார்கள். எம்பள்ளிக்கு ஒரே வாயில் மட்டுமே உள்ளது எனவும், அவசர காலங்களில் அவசர வழி தேவைக்காக எம்பள்ளி சுற்றுச்சுவரை ஒட்டி அமைந்துள்ள கழிப்பறையினை இடம் மாற்றி கட்டிடவும் அவ்விடத்தில் அவசர கால வாயிற் கதவு அமைக்க ஏதுவாக இடம் வழங்குமாறு கோரியுள்ளதன்பேரில், பள்ளி மாணவிகள் 2000 நபர்களது நலன் கருதி வார்டு எண்.15 போஸ்ட் ஆபிஸ் ரோட்டில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான பொதுகழிவறை கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2880/2019/இ.1)

**தீர்மான எண்.. 145 … . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ......**

**<u>பொருள் எண்..14</u>**

பட்டுக்கோட்டை நகராட்சியின் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி செலுத்துவது தொடர்பாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் வழக்கு எண்.W.P.(MD).No.12167/2019 தொடர்பாக வழக்கறிஞர் திரு எம்.கண்ணன் அவர்கள் மூலம் வழக்கு நடைபெறுவதனால் வழக்கிற்காக முதல் தவணை தொகையாக ரூ.15000/– வழங்க கோரியதன்பேரில் இந்நகராட்சி இளநிலை உதவியாளர் திரு க.திருச்சந்திரன் மூலம் தொகை வழங்கப்பட்டதை அன்னாருக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1) பொதுநிதியின் கீழ் மன்றம் அனுமதிக்கலாம்.
2) இப்பொருள் தொடர்பாக அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.க.எண்.6743/2013/இ.1)

**தீர்மான எண்.. 146 … . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ......**

**<u>பொருள் எண்..15</u>**

நகராட்சி பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணிக்கு 26.06.2019 தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| .1. | பட்டுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.28, அண்ணாகுடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள நவீன எரிவாயு தகன மேடை வளாக பகுதியில் அமைந்துள்ள சேதமடைந்த புகைபோக்கியினை மாற்றுதல் மற்றும் ஈமசடங்கு அறைகள் பராமரிப்பு பணிகள் செய்து தரும் பணி | ரூ.1275000/– | SGS Services, No.314, 4th Street, Dr.Ambedhkar Nagar, Kolathur, Chennai – 99 | 0.30 % குறைவு |
| | | | KGS Industries, No.18C Thiruvallur Street, Padi Mannurpet, Chennai - 50 | 1.70 % அதிகம் |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம். |
| | 2) பணியின் அவரச அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.2610/2019/இ.1) |

**தீர்மான எண்.. 147 ... . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ......**

**<u>பொருள் எண்..16</u>**

நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் கீழ்கண்ட பணிக்கு 25.07.2019 தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| .1. | குடிநீர் விநியோகத்தில் உள்ள குளோரினேசன் பிளான்டிற்கு தேவையான Sodium Hyppo Choride திரவம் சப்ளைசெய்தல் பணி | ரூ.1150000/– | பகவதி ஏஜென்சீஸ், மன்னார்குடி. | 0.33 % குறைவு |
| | | | காவியா என்டர்பிரைசஸ், மன்னார்குடி. | 6.67 % அதிகம் |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம். |
| | 2) பணியின் அவரச அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.1501/2019/இ.1) |

**தீர்மான எண்.. 148 ... . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ......**

<u>பொருள் எண்..17</u>

நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் கீழ்கண்ட பணிக்கு 25.06.2019 தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| .1. | வார்டு எண்.22 கொண்டப்பன்நாயக்கன்பாளையம் பகுதியில் தமிழக அரசு திட்டமான Water ATM அமைக்கும் பணிக்கு நகராட்சி பைப் லைனில் இருந்து தண்ணீர் வழங்கும் பொருட்டு 140 மீட்டர் நீளத்திற்கு Earth Work மற்றும் 11/2 PVC பைப் லைன் பொருத்தும் | ரூ.42000/- | எஸ்.கணேசன் | 0.18 % குறைவு |
| | | | கே.எடிசன் | 3.62 % அதிகம் |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் அனைத்து பணிகளுக்கும் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம். |
| | 2) பணியின் அவரச அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.2401/2019/இ.1) |

**தீர்மான எண்.. 149 ... . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ......**

<u>பொருள் எண்..18</u>

பட்டுக்கோட்டை நகராட்சிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு விதி-110 எண்.1/2018-19 ன் கீழ் இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டத்திற்கு மாற்றாக கழிவு நீர் கசடு மேலாண்மை திட்டத்தின் கீழ் கழிவு நீர் கசடு சுத்தீகரிப்பு நிலையம் (FSTP) அமைக்கும் பணி மேற்கொள்ள ஆணையிட்டுள்ளதன்பேரில், அரசாணை எண்.88 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.08.2018 ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இப்பணியினை செயல்படுத்திட இவ்உரக்கிடங்கில் சேகாரம் செய்து வைத்துள்ள கழிவுகளை Hitachi இயந்திரம் மற்றும் டிராக்டர் ஆகியவற்றை ஈடுபடுத்தி அப்புறப்படுத்திட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டதற்கிணங்க, நகராட்சி ஆணையர் அவர்களின் உத்திரவின்பேரிலும், குப்பை கழிவுகளை அப்புறப்படுத்திட தயார் செய்த உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3066/2019/இ.1) |

**தீர்மான எண்.. 150 ... . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ......**

பொருள் எண்..19

நகராட்சி பொது நிதியின் கீழ் கீழ்கண்ட பணிக்கு 11.07.2019 தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| .1. | பட்டுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட உரக்கிடங்கில் கசடு கழிவு மேலாண்மை திட்டம் அமைத்திட இவ்உரக்கிடங்கில் சேகாரம் செய்து வைத்துள்ள கழிவுகளை Hitachi இயந்திரம் மற்றும் டிராக்டர் ஆகியவற்றை ஈடுபடுத்தி அப்புறப்படுத்திடும் பணி | ரூ.500000/– | பகவதி ஏஜென்சீஸ், மன்னார்குடி. | 0.10 % குறைவு |
| | | | காவியா என்டர்பிரைசஸ், மன்னார்குடி. | 4.80 % அதிகம் |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம். |
| | 2) பணியின் அவரச அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.3066/2019/இ.1) |

**தீர்மான எண்.. 151 ... . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ......**

பொருள் எண்..20

பட்டுக்கோட்டை நகராட்சியில் உள்ள 33 வார்டுகளில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீர் உள்ளுர் நீர் ஆதாரம் ஆழ்குழாய் கிணறுகள் மூலம் மூன்று தலைமை நீரேற்று நிலையங்கள் மற்றும் 12 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலமாக தினமும் குடிநீர் விநியோகம் வழங்கப்படுகிறது. இவைகளில் 10 எச்.பி முதல் 40 எச்.பி வரை சப்மெர்சிபிள் மின் மோட்டார் பொருத்தப்பட்டுள்ளது. இவற்றில் அவ்வப்பொழுது ஏற்படும் பழுதுகள் மற்றும் காயல் ரீவைன்டிங் செய்தல், பம்ப் பாகங்கள் மாற்றுதல், ஸ்டாட்டர் உபகரணங்கள் பொருத்துதல் ஆகிய பணிகளை உடனுக்குடன் செய்ய வேண்டியுள்ளது. ஆகவே, குடிநீர் விநியோகம் தடையில்லாமல் சீராக வழங்க மேற்கண்டுள்ள பணிகளை (2019–2020) ஆண்டு பராமரிப்பு முறையில் செய்திடவும் இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.9.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | குடிநீர் நிதியின் கீழ் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3065/2019/இ.1) |

**தீர்மான எண்.. 152 ... . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ......**

**பொருள் எண்..21**

பட்டுக்கோட்டை நகராட்சி குடிநீர் விநியோகம் பணிகள் மூன்று தலைமை நீரேற்று நிலையங்கள் 1) சாந்தஙகாடு 2) கொண்டிகுளம் 3) மாட்டுச்சந்தை எனவும் மற்றும் 12 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் வாயிலாக தினம் 8.00 MLD அளவில் 104 LPCD பாதுகாக்கப்பட்ட குடிநீர் பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும், இதில் உள்ள பம்பிங மெயின் குழாய் நீளம் 8.50 கி.மீட்டர் மற்றும் பகிர்மான குழாய்களில் நீளம் 105 கி.மீட்டர் அளவில் உள்ளது. இந்த குழாய்களில் 12" 10" Ac மெயின் மற்றும் 8" DI 3" முதல் 8" வரை PVC எனவும் குடிநீர் வழஙகப்படுகிறது. இவைகளில் ஏற்படும் நீர் கசிவுகள், உடைப்புகள், வால்வுகள் பழுது ஏற்பட்டால் அவ்வப்பொழுது உடனுக்குடன் சரி செய்தல் போன்ற பணிகள் குடிநீர் விநியோகத்தில் சரி செய்ய வேண்டியுள்ளது. அதற்கான வருடாந்திர பராமரிப்பு பணிகள் ஒப்பந்தம் மூலம் வழங்க 2019–2020 (1.8.2019 முதல் 31.7.2020) வரை உத்தேச மதிப்பீடு தொகை ரூ.6.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு : | குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம் .<br>(ந.க.எண்.3149/2019/இ.1) |

**தீர்மான எண்.. 153 … . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ……**

**பொருள் எண்..22**

வறட்சி நிவாரண பணி SDRF-2019 நிதியின் கீழ் கீழ்கண்ட பணிக்கு 19.06.2019 தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| .1. | ஆழ்குழாய் கிணறு சுத்தம் செய்தல் (Flushing) 20 எண்ணம் | ரூ.500000/– | R.M.Engineering, Coimbatore | 0.36 % குறைவு |
| | | | ஏம்.பாலமுருகன், ஒப்பந்ததாரார், வேதாரண்யம் | 5.44 % அதிகம் |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு,, | 1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம். |
| | 2) பணியின் அவரச அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.2267/2019/இ.1) |

**தீர்மான எண்.. 154 … . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ……**

**<u>பொருள் எண்..23</u>**

வறட்சி நிவாரண பணி SDRF-2019 நிதியின் கீழ் கீழ்கண்ட பணிக்கு **19.06.2019** தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் (மதிப்பீட்டை விட) |
|---|---|---|---|---|
| 1.. | நீர்மூழ்கி புதிய மின்மோட்டார் வாங்கி பொருத்தும் பணி (2 எச்.பி, 15 எச்.பி) 11 எண்ணம் | ரூ.500000/– | R.M.Engineering, Coimbatore | 0.17 % குறைவு |
| | | | எம்.பாலமுருகன், ஒப்பந்ததாரார், வேதாரண்யம் | 5.11 % அதிகம் |

| அலுவலக குறிப்பு,, | 1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம். |
|---|---|
| | 2) பணியின் அவரச அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண். 2267/2019/இ.1) |

**தீர்மான எண்.. 155 ... . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ......**

**<u>பொருள் எண்..24</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கோட்டம்–Iல் பணிபுரிந்து வரும் திரு.பாண்டி த/பெ. (லேட்) நாகப்பன் என்பவர் 31.7.2014 முதல் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வருகிறார். அன்னார் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக புதுக்கோட்டை நகராட்சிக்கு பணி மாறுதலில் செல்வதற்கு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பமானது மன்றத்தின் பார்வைக்கும், அன்னார் பணி மாறுதலில் செல்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.. மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்..3146/19/எச்1)

**தீர்மான எண்.. 156 ... . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ......**

**<u>பொருள் எண்..25</u>**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கோட்டம்–2ல் பணிபுரிந்து வரும் திரு.ராஜ்குமார் த/பெ.சுந்தர்ராஜ் என்பவர் 14.6.2016 முதல் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வருகிறார். அன்னார் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக அறந்தாங்கி நகராட்சிக்கு பணி மாறுதலில் செல்வதற்கு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பமானது மன்றத்தின் பார்வைக்கும், அன்னார் பணி மாறுதலில் செல்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு.. மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்..2182/19/எச்1)

**தீர்மான எண்.. 157 ... . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ......**

**பொருள் எண்..26**

இந்நகராட்சிக்கு சொந்தமானதும்,பாத்தியப்பட்டதுமான புதிய பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சிப்பெட்டி வைத்து விளம்பரம் செய்யும் உரிமத்திற்கு 01.08.2019 முதல் 31.07.2022 மூன்றாண்டு வரையிலான உரிமத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 16.07.2019ம் நாளன்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்களின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஏலம் மற்றும ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்களின் பெயர் மற்றும் முகவரி | ஏலக்கேள்வி (ஒராண்டிற்கு) ரூ | ஒப்பந்தப்புள்ளி (ஒராண்டிற்கு) ரூ |
|---|---|---|---|
| 1. | திரு .S.உலகநாதன்<br>23A, காசாங்குளம் முதல் சந்து<br>பட்டுக்கோட்டை | -- | 2,90,000- |
| 2. | திரு .S.ராமன்<br>37, பெரிய தெரு,<br>பட்டுக்கோட்டை | -- | 2,91,000- |

| | |
|---|---|
| **அலுவலக குறிப்பு** | மேற்காணும் விபரத்தின்படி வரிசை எண்.2ல் கண்டுள்ள திரு.S.ராமன்அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகை 2018-19ம் ஆண்டுத்தொகை ரூ.275265/- விட ரூ15375/- அதிகம் 2016-17 முதல் 2018-2019-ம் வரையுள்ள மூன்றாண்டு சராசரி தொகை ரூ.262708/-ஐ விட மற்றும் சென்ற ஆண்டு 5 % தொகை 289406/- விட உயர்வாகஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு உள்ளது. எனவே உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.2,91,000/- கொடுத்துள்ள திரு. S.ராமன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி தொகையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.. 3157 /2019 /அ2 ) |

**தீர்மான எண்.. 158 ... . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ......**

**பொருள் எண்..27**

இந்நகராட்சிக்கு சொந்தமான அஞ்சா நெஞ்சன் அழகிரி நாளங்காடி கடை எண்.28-க்கு 16.07.2019ம் நாளன்று ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்களின் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஏலம் மற்றும ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்களின் பெயர் மற்றும் முகவரி | ஏலக்கேள்வி (ஒராண்டிற்கு) ரூ | ஒப்பந்தப்புள்ளி (ஒராண்டிற்கு) ரூ |
|---|---|---|---|
| 1. | திரு .S.J.சம்பத்<br>த.பெ.ஜெயராமன்<br>136, Kon பாளையம் தெரு<br>பட்டுக்கோட்டை | 1925- | -- |

| | | | |
|---|---|---|---|
| 2. | திரு .S.ஆறுமுகம்<br>த.பெ.சாமிநாதன்<br>139 C, பாக்கியம் நகர்<br>பட்டுக்கோட்டை | 1950– | –– |

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மேற்காணும் விபரத்தின்படி வரிசை எண்.2ல் கண்டுள்ள திரு.S.ஆறுமுகம் அவர்கள் உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ.1950/–கொடுத்துள்ளார். எனவே திரு.S.ஆறுமுகம் அவர்களின் ஏலத்தொகையினை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.. 3159 /2019 /அ2 ) |

**தீர்மான எண்.. 159 ... . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ......**

**பொருள் எண்..28**

2019–20ம் ஆண்டிற்கு ஒப்பந்ததாரர்களிடம் பிடித்தம் செய்யப்பட்ட **GST** தொகை **GST** நம்பரில் செலுத்தி ஒப்பந்ததாரர் பெயரில் தொகை வரவு வைக்க ஆடிட்டருக்கு உத்தேச செலவுத் தொகையாக ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு..** மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்..4459/2018/பி1)

**தீர்மான எண்.. 160 ... . அனுமதிக்கப்பட்டது ......**

**பொருள் எண்..29**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான கிருமிநாசினிகளான நீர்த்த சுண்ணாம்பு, கருப்புபினாயில் மற்றும் பிளீச்சிங் பவுடர் போன்றவற்றினை 2019–20ம் ஆண்டிற்கு சப்ளை செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 10.07.2019 அன்று கீழ்க்கண்ட நிறுவனத்தாரிடமிருந்து மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விபரம்<br>கிலோ 1ன் விலை |
|---|---|---|
| 1. | ஐயப்பா டிரேடர்ஸ்இ 33/6பி<br>சிவக்கொல்லை, எஸ்.வி.நகர்<br>1வது நைனாங்குளம் (அஞ்சல்<br>பட்டுக்கோட்டை. | 1. நீர்த்த சுண்ணாம்பு – 4.25<br>2. கருப்பு பினாயில் – 19.00<br>3. பிளீச்சிங் பவுடர் – 20.50 |
| 2. | TCCWS<br>பட்டுக்கோட்டை. | 1. நீர்த்த சுண்ணாம்பு – 4.25<br>2. கருப்பு பினாயில் – 20.00<br>3. பிளீச்சிங் பவுடர் – 21.00 |
| 3. | யசோதா ஏஜென்சீஸ்,<br>87/எ, தஞ்சாவூர் ரோடு,<br>பட்டுக்கோட்டை. | 1. நீர்த்த சுண்ணாம்பு – 5.75<br>2. கருப்பு பினாயில் – 22.00<br>3. பிளீச்சிங் பவுடர் – 25.00 |

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை வரிசை எண்..1ல் காணும் நிறுவனம் அளித்துள்ளது. இவ்வொப்பந்தப்புள்ளியானது வரிசை எண்..2 மற்றும் 3ல் காணும் நிறுவனம் அளித்துள்ள ஒப்பந்தபுள்ளியினை விட குறைவாக உள்ளது. ஆகவே குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை அளித்துள்ள ஐயப்பா டிரேடர்ஸ்இ 33/6பி சிவக்கொல்லை, எஸ்.வி.நகர் 1வது நைனாங்குளம் அஞ்சல் பட்டுக்கோட்டை நிறுவன ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| **அலுவலக குறிப்பு** | 1) மன்றம் அனுமதிக்கலாம். |
|---|---|
| | 2) மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஐயப்பா டிரேடர்ஸ் நிறுவன ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம். |
| | 3) மேற்கண்ட பணிக்கு ஆகும் உத்தேச செலவு ரூ.500000/—யை பொது நிதி மூலம் மேற்கொள்ளவும் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்..6517/19/எச்1) |

**தீர்மான எண்.. 161 … . அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ……**

ஒம்/என்.பாஸ்கர்
தனி அலுவலர்/ஆணையர்(கூ.பொ)
பட்டுக்கோட்டை நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர் (கூ.பொ)
பட்டுக்கோட்டை நகராட்சி